உ

கடவுள் துணை.

அதிவீரராமபாண்டியன்

இயற்றிய

# வெற்றிவேற்கைப்பதவுரை.

இரண்டாம்பதிப்பு.

சென்னை:

ஸ்ரீநிதிஅச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1879.

உ

கடவுள் துணை.

# வெற்றிவேற்கைப்பதவுரை.

காப்பு.

பிரணவப்பொருளாம்பெருந்தகையைங்கரன்
சரணவற்புதமலர்தலைக்கணிவோமே.

பிரணம்=பிரணவமென்றும் மந்திரத்தினது, பொருள் ஆம்=பொருளாகிய, பெருந்தகை= பெருந்தன்மையுள்ள, ஐங்கரன்=ஐந்துகரங்களையுடைய விநாயகரது, சரணம்= பாதங்களாகிய, அற்புதம்=ஆச்சரியமாயிருக்கின்ற, மலர்= மலர்களை, தலைக்கு=சிரசுக்கு, அணிவோம் = தரிப்போம். ஏ - ஈற்றசை.

நூற்பயன்.

வெற்றிவேற்கைவீரராமன்
கொற்கையாளிகுலசேகரன்புகல்
நற்றமிழ்தெரிந்தநறுந்தொகைதன்னால்
குற்றங்களைவோர்குறைவிலாதவரே.

கொற்கைஆளி=கொற்கையென்கிற ஊரை ஆள்பவனாகியும், குலசேகரன்=தன்குலத்திற்கு மகுடம்போல்பவனாகியுமிருக்கின்ற, வெற்றிவேற்கை=செயத்தைத்தரும் வேலைத்தாங்கியகையை யுடைய, வீரராமன்=அதிவீரராம பாண்டியன், புகல்=சொன்ன, நல்தமிழ்=நன்மையாகிய தமிழில், தெரிந்த=ஆராய்ந்தெடுக்கப்பட்ட, நறுந்தொகைதன்னால்=நறுந்தொகையினாலே, குற்றங்களைவோர்=தமதுகுற்றங்களைநீக்குவோர், குறைவுஇலாதவர்=குறைறதீர்ந்தவராவர். ஏ - அசை.

## நூல்.

1. எழுத்தறிவித்தவனிறைவனாகும்.

எழுத்து = இலக்கணமுதலியநூல்களை, அறிவித்தவன்= கற்பித்தஆசிரியன், இறைவன்ஆகும்=கடவுளாம்.

2. கல்விக்கழகுகசடறமொழிதல்.

கல்விக்கு=வித்தைக்கு, அழகு=அழகாவது,கசடு அற= குற்றமற, மொழிதல்=சொல்லுதலாம்.

3. செல்வர்க்கழகுசெழுங்கிளைதாங்குதல்.

செல்வர்க்கு=தனவான்களுக்கு, அழகு=அழகாவது,செழுங்கிளை=செழுமையாகிய சுற்றத்தாரை, தாங்குதல்=காப்பாற்றுதலாம்.

4. வேதியர்க்கழகுவேதமுமொழுக்கமும்.

வேதியர்க்கு=பிராமணருக்கு,அழகு=அழகாவது, வேதமும்=வேதமோதலும், ஒழுக்கமும்=ஆசாரமுமாம்.

5. மன்னவர்க்கழகுசெங்கோன்முறைமை.

மன்னவர்க்கு = அரசருக்கு, அழகு=அழகாவது, செங்கோல்=செங்கோலினது,முறைமை=முறைமையாம்.

6. வைசியர்க்கழகுவளர்பொருளீட்டல்.

வைசியர்க்கு=வணிகருக்கு,அழகு=அழகாவது,வளர்பொருள்=வளர்தற்குரியபொருளை, ஈட்டல்= சம்பாதித்தலாம்.

7. உழவர்க்கழகிங்குழுதூண்விரும்பல்.

உழவர்க்கு=உழுதுபயிர்செய்யும் வேளாளர்க்கு,அழகு=அழகாவது,இங்கு=இவ்வுலகத்தில்,உழுது=உழுதுபயிர்செய்து,ஊண்=உண்பதற்கு, விரும்பல்=விரும்புதலாம்.

8. மந்திரிக்கழகுவருபொருளுரைத்தல்.

மந்திரிக்கு=அமைச்சனுக்கு,அழகு=அழகாவது,வருபொருள்=பின்வருவதை,உரைத்தல்=முன்னேசொல்லுதலாம்.

9. தந்திரிக்கழகுதறுகணாண்மை.

தந்திரிக்கு=படைத்தலைவனுக்கு,அழகு=அழகாவது, தறுகண்=அஞ்சாமையை,ஆண்மை=ஆளுந்தன்மையாம்.

10. உண்டிக்கழகுவிருந்தோடுண்டல்.

உண்டிக்கு = போஜனத்துக்கு, அழகு = அழகாவது, விருந்தோடு=விருந்தினரோடு, உண்டல்=உண்ணுதலாம்.

11. பெண்டிர்க்கழகெதிர்பேசாதிருத்தல்.

பெண்டிர்க்கு= பெண்டுகளுக்கு, அழகு = அழகாவது, எதிர்பேசாது= தங்கணவரோடு எதிர்த்துப்பேசாமல், இருத்தல்=இருத்தலாம்.

12. குலமகட்கழகுதன்கொழுநனைப்பேணுதல்.

குலமகட்கு=நற்குலத்திற்பிறந்த ஸ்திரீக்கு, அழகு = அழகாவது, தன்=தனது, கொழுநனை = கணவனை, பேணுதல்=பாதுகாத்தலாம்.

13. விலைமகட்கழகுதன்மேனிமினுக்குதல்.

விலைமகட்கு=வேசிக்கு,அழகு=அழகாவது,தன்=தனது, மேனி=வடிவை, மினுக்குதல்=ஆடையணிமுதலியவற்றால் மினுக்குதலாம்.

14. அறிவோர்க்கழகுகற்றுணர்ந்தடங்கல்.

அறிவோர்க்கு=அறிவுடையோர்க்கு,அழகு=அழகாவது, கற்று=படித்து,உணர்ந்து=அறிந்து, அடங்கல்=அதற்குத்தகுதியாகஅடங்கியிருப்பதாம்.

15. வறியோர்க்கழகுவறுமையிற்செம்மை.

வறியோர்க்கு=தரித்திரர்க்கு, அழகு= அழகாவது, வறுமையில்=வறுமைக்காலத்திலும், செம்மை=நற்குணமுடைமையாம்.

அதனால்-ஆகையால்.

16. தேம்படுபனையின்றிரள்பழத்தொருவிதை
வானுறவோங்கிவளம்பெறவளரினும்
ஒருவற்கிருக்கநிழலாகாதே.

தேம்படு=தித்திப்புண்டாகிய, பனையின்=பனையினது, திரள்பழத்து=திரண்டகனியிலுள்ள,ஒருவிதை=ஒருவித்தானது,வான்உற=ஆகாயத்தைமுட்ட, ஓங்கி=உயர்ந்து, வளம்பெற=செழுமைஉண்டாக,வளரினும்=வளர்ந்தாலும், ஒருவற்கு=ஒருவனுக்காயினும்,இருக்க=இருக்கும்படி,நிழல்ஆகாது=நிழலாகமாட்டாது. ஏ-அசை.

17. தெள்ளியவாலின்சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க்கயத்துட்சிறுமீன்சினையினும்
நுண்ணிதேயாயினுமண்ணல்யானை
அணிதேர்புரவியாட்பெரும்படையொடு
மன்னர்க்கிருக்கநிழலாகும்மே.

தெள்ளிய=தெள்ளியெடுக்கத்தகுந்த, ஆலின்=ஆலமரத்தினது, சிறுபழத்து=சிறியகனியிலுள்ள, ஒருவிதை=ஒருவித்தானது, தெள்நீர்=தெளிவாகியநீரையுடைய, கயத்துள்=தடாகத்துளிருக்கின்ற, சிறுமீன்=சிறுமீனினது, சினையினும்=முட்டையைக்காட்டிலும், நுண்ணிதே=சிறியதே, ஆயினும்=ஆனாலும், அண்ணல்யானை=பெருமையாகியயானையும், அணிதேர்=அழகியதேரும், புரவி=குதிரையும், ஆள்=பதாதியுஞ்சேர்ந்த, பெரும்படையொடு = பெரிதாகியசேனையோடு, மன்னர்க்கு=அரசர்க்கு, இருக்க=இருப்பதற்கு, நிழலாகும்=நிழலாயிருக்கும். ஏ - அசை.

அதனால் - ஆகையால்.

18. பெரியோரெல்லாம்பெரியருமல்லர்.

பெரியோரெல்லாம்= உருவத்திலே பெரியோர்களெல்லாரும், பெரியரும்= பெருமையுடையவர்களும், அல்லர்= ஆகார்கள்.

19. சிறியோரெல்லாஞ்சிறியருமல்லர்.

சிறியோரெல்லாம்=உருவிலே சிறியோர்களெல்லாரும், சிறியரும்=சிறியவர்களும், அல்லர்=ஆகார்கள்.

20. பெற்றோரெல்லாம்பிள்ளைகளல்லர்,

பெற்றோரெல்லாம்=பெற்றபுத்திரர்களெல்லாரும்,பிள்ளைகள்=புத்திரர்கள், அல்லர்=ஆகார்கள்.

21. உற்றோரெல்லாமுறவினரல்லர்.

உற்றோரெல்லாம்= சுற்றத்தாரெல்லாரும், உறவினர்= சுற்றத்தார், அல்லர்=ஆகார்கள்.

22. கொண்டோரெல்லாம்பெண்டிருமல்லர்.

கொண்டோரெல்லாம் = கொள்ளப்பட்டோரெல்லா ரும், பெண்டிரும்=மனைவியரும், அல்லர்=ஆகார்.

23, அடினுமாவின்பாறன்சுவைகுன்றாது.

அடினும்=காய்ச்சினாலும், ஆவின் பால்=பசுவின்பாலானது, தன்சுவை=தன்னுடையதித்திப்பு, குன்றாது=குறைவுபடாது.

24. சுடினுஞ்செம்பொன்றன்னொளிகெடாது.

சுடினும் = சுட்டாலும், செம்பொன்= செம்மையாகிய பொன்னானது, தன்னொளி=தன்னுடைய ஒளி, கெடாது= குறைவுபடாது.

25. அரைக்கினுஞ்சந்தனந்தன்மணமறாது.

அரைக்கினும் = தேய்த்தாலும், சந்தனம் = சந்தனக்கட்டையானது, தன்மணம் = தனதுவாசனை, அறாது = நீங்காது.

26. புகைக்கினுங்காரகில்பொல்லாங்குகமழாது.

புகைக்கினும் = புகையச்செய்தாலும், காரகில் = சேகுபற்றிய அகிற்கட்டையானது, பொல்லாங்கு = தீநாற்றம், கமழாது = நாறாது.

27. கலக்கினுந்தண்கடல்சேறாகாதே.

கலக்கினும் = கலக்கினாலும், தண்கடல் = குளிர்ச்சியாகியகடலானது, சேறாகாது = சேறாகமாட்டாது. ஏ - அசை.

28. அடினும்பால்பெய்துகைப்பறாதுபேய்ச்சுரைக்
[காய்.

பால்பெய்து = பாலைவிட்டு, அடினும் = சமைத்தாலும், பேய்ச்சுரைக்காய் = பேய்ச்சுரைக்காயானது, கைப்பு = கசப்பு, அறாது = நீங்காது.

29. ஊட்டினும்பல்விரையுள்ளிகமழாதே.

பல்விரை = பலவாசனைகளை, ஊட்டினும் = உண்பித்தாலும், உள்ளி = உள்ளிப்பூண்டானது, கமழாது = நற்கந்தமுண்டாகாது. ஏ - அசை.

30. ஒருநாட்பழகினும்பெரியோர்கேண்மை
இருநிலம்பிளக்கவேர்வீழ்க்குமே.

ஒருநாள்=ஒருதினம், பழகினும்=பழகினாலும், பெரியோர் கேண்மை=மேன்மக்களுடையசிநேகமானது, இருநிலம்=பெருமையாகியபூமியில், பிளக்க=பிளக்கும்படி, வேர் வீழ்க்கும்=வேரூன்றிநிற்கும். ஏ - அசைநிலை.

31. நாறுண்டுபழகினுமூர்க்கர்கேண்மை
நீர்க்குட்பாசிபோல்வேர்க்கொள்ளாதே.

நாறுண்டு=நூறுவருடம், பழகினும்=பழகினாலும், மூர்க்கர்கேண்மை=கீழ்மக்களுடையசிநேகமானது,நீர்க்குள்= நீர்க்குள்ளே, பாசிபோல்= பாசியைப்போல், வேர்க்கொள்ளாது=வேரிறங்காது. ஏ - அசை.

அதனல் - ஆகையால்

32. பெருமையுஞ்சிறுமையுந்தாந்தரவருமே.

பெருமையும்=மேன்மையும், சிறுமையும் = கீழ்மையும், தாம்தர=தாமேகொடுக்க, வரும்=வரும். ஏ - அசை.

33. சிறியோர்செய்தசிறுபிழையெல்லாம்
பெரியோராயிற்பொறுப்பதுகடனே.

சிறியோர்=கீழ்மக்கள்,செய்த = செய்த, சிறுபிழை = அற்பமாகியகுற்றங்களை,எல்லாம்=முழுவதும்,பெரியோராயின்=பெரியோராயிருக்கவேண்டின்,பொறுப்பதுகடன்= ஒருவர்பொறுப்பதேநீதியாம்.ஏ - அசை

34. சிறியோர்பெரும்பிழைசெய்தனராயின்
பெரியோரப்பிழைபொறுத்தலுமரிதே.

சிறியோர்=சிற்றறிவுடையோர், பெரும்பிழை= பெரிதாகியகுற்றத்தை, செய்தனராயின் = செய்வாராளுல், பெரியோர்=பெரியோர், அப்பிழை=அக்குற்றத்தை, பொறுத்தலும்=பொறுத்திருத்தலும், அரிது=அரிதாம். ஏ - அசை.

அதனுல் - ஆகையால்.

35. கற்கைநன்றேகற்கைநன்றே.

கற்கை=கற்பது, நன்றே=நன்மையுடையதே, கற்கை= கற்பது, நன்றே=நன்மையுடையதே.

36. பிச்சைபுகினுங்கற்கைநன்றே.

பிச்சை=பிச்சையில், புகினும்=புகுந்தாலும், கற்கை= கற்பது, நன்றே=நன்மையுடையதே.

37. கல்லாவொருவன்குலநலம்பேசுதல்
நெல்லினுட்பிறந்தபதராகும்மே.

கல்லாஒருவன்=கல்லாத ஒருவனுடைய, குலநலம் =குலத்தினது மேன்மையை, பேசுதல் = எடுத்துப்பேசுதல், நெல்லினுள்பிறந்த= நெற்பயிரினுளுண்டான, பதராகும்= பதர்போலாகும். ஏ - அசை.

38. நாற்பாற்குலத்தின்மேற்பாலொருவன்
கற்றிலனாயிற்கீழிருப்பவனே.

நாற்பால்=நான்குவகையாகிய, குலத்தின் = வருணங்களில், மேற்பால்= முன்னின்றவருணத்திற்பிறந்த, ஒருவன்= ஒருவன், கற்றிலனாயின் = கல்லாதவனானால், கீழ் இருப்பவனே=தாழ்ந்தவிடத்தில் இருக்கத்தக்கவனே.

39. எக்குடிபிறப்பினும்யாவரேயாயினும்
அக்குடிகற்றோரைமேல்வருகென்பர்.

எக்குடிபிறப்பினும்=எந்தக்குலத்திலே பிறந்தாலும், யாவரேயாயினும்=யாரானபோதிலும், அக்குடி= அக்குலத்தில், கற்றோரை=கற்றவரை, மேல்வருகென்பர்=மேலிடத்து வருகவென்றழைப்பார்.

40. அறிவுடையொருவனையரசனும்விரும்பும்.

அறிவுடைஒருவனை=அறிவையுடையஒருவனை, அரசனும்=அரசனும், விரும்பும்=விரும்புவான்.

அதனால் - ஆகையால்

41. அச்சமுள்ளடக்கியறிவகத்தில்லாக்
கொச்சைமக்களைப்பெறுதலினக்குடி
எச்சமற்றேமாந்திருக்கைநன்றே.

அச்சம்=பயத்தை,உள்அடக்கி=தன்னுள்நிறைத்து, அறிவு=அறிவானது, அகத்து=மனத்தின்கண்,இல்லா=இல்லாத,கொச்சை=ஆடுகளையொத்த,மக்களை= பிள்ளைகளை,பெறுதலின்=பெறுதலினும்,அக்குடி=அக்குலத்துள்ளவர், எச்சம் அற்று=சந்ததியில்லாமல்,ஏமாந்து=இன்புற்று,இருக்கை=இருத்தல், நன்றே=நன்மையே.

42. யானைக்கில்லைதானமுந்தருமமும்.

யானைக்கு=கைந்நீண்டிருப்பினும் யானைக்கு,தானமும்=கொடையும், தருமமும் = தருமஞ்செய்தலும், இல்லை = இல்லை.

43. பூனைக்கில்லைதவமுந்தயையும்.

பூனைக்கு=தன்கண்ணை மூடிக்கொண்டுசாந்தமாயிருப்பினும் பூனைக்கு, தவமும்=தவஞ்செய்தலும், தயையும்=சாந்தகுணமும், இல்லை=இல்லை.

44. ஞானிக்கில்லையின்பமுந்துன்பமும்.

ஞானிக்கு=ஞானமுடையவனுக்கு, இன்பமும் = சுகமும், துன்பமும்=துக்கமும், இல்லை=இல்லை.

45. சிதலைக்கில்லைசெல்வமுஞ்செருக்கும்.

சிதலைக்கு=செல்லுக்கு, செல்வமும்=பிறர்க்குப்பயன்படுஞ்செல்வமுடையவர் பொருளென்பதும், செருக்கும்=தாமேயுண்டுகளிப்பவர்பொருளென்பதும்,இல்லை=இல்லை.

46. முதலைக்கில்லைநீத்துநிலையும்.

முதலைக்கு=முதலைக்கு, நீத்தும்=நீந்துநீரென்பதும்,நிலையும்=நிலைகொள்ளு நீரென்பதும், இல்லை=இல்லை.

47. அச்சமுநாணமுமறிவிலோர்க்கில்லை.

அச்சமும்=அஞ்சத்தக்கதும், நாணமும்=நாணத்தக்கதும், அறிவிலோர்க்கு=பேதையர்க்கு, இல்லை=இல்லை.

48. நாளுங்கிழமையுநலிந்தோர்க்கில்லை.

நாளும் = நட்சத்திரமும், கிழமையும் = வாரமும், நலிந்தோர்க்கு=நோயால் நொந்தவர்க்கு, இல்லை=இல்லை.

49. கேளுங்கிளையுங்கெட்டோர்க்கில்லை.

கேளும்=சிநேகமும், கிளையும்=சுற்றமும், கேட்டோர்க்கு=குலம் கெட்டுப்போனவர்க்கு, இல்லை= இல்லை.

50. உடைமையும்வறுமையுமொருவழிநில்லா.

உடைமையும்=செல்வமும், வறுமையும்= தரித்திரமும், ஒருவழி=ஓரிடத்து,நில்லா=நிற்கமாட்டா.

51. குடைநிழலிருந்துகுஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர்நண்ணினுநண்ணிவர்.

குடை=குடையினது, நிழல்இருந்து=நிழலிலிருந்து,குஞ்சரம்=யானையை, ஊர்ந்தோர் = ஏறிநடத்தும்அரசரும்,நடை=நடப்பதில்,மெலிந்து=தளர்ந்து,ஓரூர்=மற்றொருதேசத்தை, நண்ணினும்=சேரினும், நண்ணுவர்=சேருவர்.

52. சிறப்புஞ்செல்வமும்பெருமையுமுடையோர்
அறக்கூழ்ச்சாலையடையினுமடைவர்.

சிறப்பும்=உயர்வையும், செல்வமும் = செல்வத்தையும், பெருமையும்=மேன்மையும், உடையோர்=உடையவர், அறம்=தருமத்தின் பொருட்டுக்கொடுக்கும், கூழ்ச்சாலை=உணவையுடையசத்திரங்களை, அடையினும்= சேர்ந்தாலும், அடைவர்=சேருவார்.

53. அறத்திடுபிச்சைகூவியிரப்போர்
அரசோடிருந்தரசாளினுமாளுவர்.

அறத்துஇடு=தருமத்தைக்குறித்து இடப்படும், பிச்சை= பிச்சையென்று, கூவி=கூப்பிட்டு, இரப்போர்=இரப்பவர், அரசோடிருந்து= அரசிலக்கணத்தோடுகூடியிருந்து, உலகு=உலகத்தை, ஆளினும்= ஆண்டாலும், ஆளுவர் = ஆளுவார்.

54. குன்றத்தனையிருநிதியைப்படைத்தோர்
அன்றைப்பகலேயழியினுமழிவர்.

குன்றுஅத்தனை=மலையளவாக, இருநிதியை= பெருமையாகியதிரவியத்தை, படைத்தோர்=படைத்தவர், அன்றைப்பகலே=அன்றைத்தினத்திலே தானே, அழியினும்=அப்பொருளையிழந்தாலும், அழிவர்=இழப்பார்.

55. எழுநிலைமாடங்கால்சாய்ந்துக்குக்
கழுதைமேய்ப்பாழாகினுமாகும்.

எழுநிலை = எழுநிலைகளையுடைய, மாடம் = மனைகளானவை, கால்சாய்ந்து = அடியோடேசாய்ந்து, உக்கு = நொறுங்கி, கழுதை = கழுதைகளும், மேய் = மேயும்படியான, பாழாகினும் = பாழ்நிலங்களானாலும், ஆகும் = ஆகும்.

56. மணவணியணிந்தமகளிராங்கே
பிணவணியணிந்துதங்கொழுநரைத்தழீஇ
உடுத்தவாடைகோடியாக
முடித்தகூந்தல்விரிப்பினும்விரிப்பர்.

மணவணி = மணக்கோலத்தை, அணிந்த = பூண்ட, மகளிர் = மாதர்கள், ஆங்கே = மணப்பந்தலிலேயே, பிணவணி = பிணத்திற்குரியகோலத்தை, அணிந்து = பூண்டு, தம்கொழுநரை = தங்களுடையகணவரை, தழீஇ = கட்டிக்கொண்டு, உடுத்த ஆடை = முன்தரித்தகூறையே, கோடியாக = அறுப்புக்கூறையாக, முடித்தகூந்தல் = முடித்தகூந்தலை, விரிப்பினும் = விரித்தாலும், விரிப்பர் = விரிப்பார்கள்.

57. பெற்றமுங்கழுதையுமேய்ந்தவப்பாழ்
பொற்றொடிமகளிருமைந்தருங்கூடி
நெற்பொலிநெடுநகராயினுமாகும்.

பெற்றமும் = மாடுகளும், கழுதையும் = கழுதைகளும், மேய்ந்த = மேய்ந்த, அப்பாழ் = அப்பாழ்நிலமும், பொற்றொடி = பொன்னால்செய்தவளையலையணிந்த, மகளிரும் = மங்கையரும், மைந்தரும் = புருடரும், கூடி = சேர்ந்து, நெற்பொலி = நெல்லினதுஅம்பாரங்களையுடைய, நெடுநகராயினும் = பெரியநகரமானாலும், ஆகும் = ஆகும்.

58. இல்லோரிரப்பதுமியல்பேயியல்பே.

இல்லோர் = தரித்திரர், இரப்பதும் = யாசகஞ்செய்வதும், இயல்பேஇயல்பே = இயற்கையேஇயற்கையே.

59. இரந்தோர்க்கீவதுமுடையோர்கடனே.

இரந்தோர்க்கு = யாசகஞ்செய்தவர்க்கு, ஈவதும் = கொடுப்பதும், உடையோர்கடனே = செல்வமுடையவரதுகடமையேயாம்.

60. நல்லஞாலமும்வானமும்பெறினும்
எல்லாமில்லையில்லிலோர்க்கே.

நல்லஞாலமும் = நல்லபூவுலகத்தையும், வானமும் = வானுலகத்தையும், பெறினும் = பெற்றாலும், எல்லாம் = அனைத்தும், இல்இல்லோர்க்கு = மனைவியரை இல்லாதவருக்கு, இல்லை = இல்லையாம். ஏ - அசை.

61. தறுகண்யானைதான்பெரிதாயினும்,
சிறுகண்மூங்கிற்கோற்கஞ்சும்மே.

தறுகண்=வீரத்தன்மையுடைய, யானை=யானையானது, தான்பெரிதாயினும் = தான்உருவத்தால்பெரிதாயினும், சிறுகண்=சிறியகணுக்களையுடைய, மூங்கில்கோற்கு= மூங்கிலாகியகோலுக்கு, அஞ்சும்=பயப்படும். ஏ - அசை.

62. குன்றுடைநெடுங்காடூடேவாழினும்
புன்றலைப்புல்வாய்புலிக்கஞ்சும்மே.

குன்றுடை=மலைகளையுடைய, நெடுங்காடூடே=நீண்டகாட்டினடுவிலே, வாழினும்=வாழ்ந்தாலும், புன்றலை=சிறியதலையையுடைய, புல்வாய்=மானானது,புலிக்கு=புலிக்கு,அஞ்சும்=பயப்படும். ஏ - அசை.

63. ஆரையாம்பள்ளத்தூடேவாழினும்
தேரைபாம்பிற்குமிகவஞ்சும்மே.

ஆரை = ஆரைப்பூண்டு நிறைந்த, ஆம்பள்ளத்தூடே=நீரையுடையகயத்தினடுவிலே, வாழினும் = வாழ்ந்தாலும், தேரை=தவளையானது,பாம்பிற்கு=பாம்பினுக்கு, மிகஅஞ்சும்=மிகுதியும்பயப்படும். ஏ - அசை.

64. கொடுங்கோன்மன்னர்வாழுநாட்டில்
கடும்புலிவாழுங்காடுநன்றே.

கொடுங்கோல்=கொடுங்கோலையுடைய, மன்னர்=அரசர்கள்,வாழும்=வாழ்கின்ற,நாட்டில்=நாட்டினும், கடும்புலி=கடுமையாகியபுலியானது, வாழும்=வாழ்கின்ற,காடு=காடானது, நன்றே=நல்லதே.

65. சான்றோரில்லாத்தொல்பதியிருத்தலின்
தேன்றேர்குரவர்தேயநன்றே.

சான்றோர்=அறிவால் நிறைந்தோர், இல்லா=இல்லாத, தொல்பதி=பழமையாகியஊரில், இருத்தலின் = இருப்பதினும்,தேன்தேர்=தேனை ஆராய்கின்ற,குறவர்தேயமே=குறவரதுநாடே,நன்று=நல்லது.

66. காலையுமாலையுநான்மறையோதா
அந்தணரென்போரனைவரும்பதரே.

காலையும்=காலைப்பொழுதிலும், மாலையும்=மாலைப்பொதிலும், நான்மறை=நாலுவேதங்களை, ஓதா=ஓதாத, அந்தணரென்போர்=பார்ப்பாரென்பவர், அனைவரும்=யாவரும,பதர்=பார்ப்பனப்பதராம். ஏ - அசை.

67. குடியலைத்திரந்துகோலொடுநின்ற
முடியுடையிறைவனுமூர்க்கனும்பதரே.

குடி அலைத்து=குடிகளைவருத்தப்படுத்தி, இரந்து=யாசகஞ்செய்து, கோலொடுநின்ற=கொடுங்கோலோடுகூடிநின்ற, முடியுடை=முடியையுடைய, இறைவன் ஆம்=அரசனாகிய, மூர்க்கனும் = மூர்க்கனும், பதர் = அரசப்பதராம். ஏ - அசை.

68. முதலுளபண்டங்கொண்டுவாணிபஞ்செய்
 தறன்பயனுண்ணுவணிகரும்பதரே.

முதல் உள=தம்மிடத்துள்ள முதற்பொருளால், பண்டங்கொண்டு=நெல்மணி முதலிய சரக்குகளைவாங்கி, வாணிபம்செய்து=வியாபாரஞ்செய்து, அதன்பயன்=அதனால்வரும் இலாபத்தை, உண்ணு=அனுபவியாத, வணிகரும்=வைசியரும், பதர்=பதராவர். ஏ - அசை.

69. வித்துமேருமுளவாயிருப்ப
 எய்த்தங்கிருக்குமேழையும்பதரே.

வித்தும்=விதையும், ஏரும்=ஏர்முதலியவும், உளவாயிருப்ப=உள்ளனவாயிருக்க, எய்த்து=சோம்பி, அங்கிருக்கும்=அவ்விடத்திலே இருக்கும், ஏழையும்=அறிவில்லாதவனும், பதர்=சூத்திரப்பதராவர். ஏ - அசை.

70. தன்மனையாளைத்தாய்மனைக்ககற்றிப்
 பின்பவட்பாராப்பேதையும்பதரே.

தன்மனையாளை=தன்மனைவியை, தாய்மனைக்கு = தாயினுடையவீட்டிற்கு, அகற்றி=அனுப்பி, பின்பு= பின்னே, அவள்=அவளை, பாரா= பாராமலேயிருக்கின்ற, பேதையும்=அறிவில்லாதவனும், பதர்=புருஷப்பதராம். ஏ-அசை.

71. தன்மனையாளைத்தனிமனையிருத்திப்
பிறன்மனைக்கேகும்பேதையும்பதரே.

தன்மனையாளை=தன்மனைவியை, தனிமனை இருத்தி=தன்வீட்டில் தனிமையாக இருக்கச்செய்து, பிறன்மனைக்கு=பிறன்மனையாளிடத்து, ஏகும்=செல்லுகின்ற, பேதையும்=மூடனும், பதர்=பதராவன். ஏ - அசை.

72. தன்னுயுதமுந்தன்கையிற்பொருளும்
பிறன்கையிற்கொடுக்கும்பேதையும்பதரே.

தன் ஆயுதமும்= தன்னுடையஆயுதத்தையும், தன்கையில்=தன்னுடையகையிலிருக்கிற, பொருளும்= திரவியத்தையும், பிறன்கையில்=அன்னியன்கையில், கொடுக்கும்= கொடுக்கின்ற, பேதையும்=மூடனும், பதர்=பதராம். ஏ-அசை.

73. வாய்ப்பறையாகவுநாக்கடிப்பாகவும்
சாற்றுவதொன்றைப்போற்றிக்கேண்மின்.

வாய்ப்பறையாகவும்=வாய்தானே பறையாகவும், நாக்கடிப்பாகவும் = நாவுதானே அடிக்கும் கோலாகவும், சாற்றுவது=கொட்டித்தெரிவிப்பதாகிய, ஒன்றை=ஒருபொருளை, போற்றி=பாதுகாத்து, கேண்மின்=கேளுங்கள்.

74. பொய்யுடையொருவன்சொல்வன்மையினால்
மெய்போலும்மேமெய்போலும்மே.

பொய்யுடைய ஒருவன் = பொய்யையுடைய ஒருவன், சொல்வன்மையினால் = சொல்லினது வலியினாலே, மெய்போலும்மே = அவன்சொல்லும்பொய் மெய்போலவோ தோன்றும், மெய்போலும்மே=மெய்போலவேதோன்றும்.

75. மெய்யுடையொருவன்சொலமாட்டாமையால்
பொய்போலும்மேபொய்போலும்மே.

மெய்யுடையொருவன்=மெய்யுடையயொருவன், சொல்மாட்டாமையால்=சொல்லுந்திறமில்லாமையினால், பொய்போலும்மே = அவன்சொல்லும்மெய் பொய்போலவே தோன்றும், பொய்போலும்மே = பொய்போலவேதோன்றும்.

அதனால் - ஆகையால்.

76. இருவர்தஞ்சொல்லையுமெழுதரங்கேட்டே
இருவரும்பொருந்தவுரையாராயின்
மனுநெறிமுறையின்வழக்கிழந்தவர்தாம்
மனமுறமறுகிநின்றழுதகண்ணீர்
முறையுறத்தேவர்மூவர்காக்கினும்
வழிவழியீர்வதோர்வாளாகும்மே.

இருவர்தம் சொல்லையும்=இருவர்களுடைய சொல்லையும்,எழுதரம்கேட்டு=மடக்கிமடக்கிஏழுமுறைவிசாரித்து, இருவரும்=அவ்விருவரும்,பொருந்த=ஒருமைப்பட, மனுநெ

திமுறையின்=மனுநீதிமுறைப்படி, உரையான் ஆயின்=ஒருவன்திர்ப்புச்சொல்லானாயின், மனம்= மனமானது, உறமறுகி நின்று=மிகக்கலக்கமுற்றுநின்று, வழக்குஇழந்தவர்=வழக்கில்தோற்றவர், அழுதகண்ணீர்=அழுதகண்ணீரானது, முறை உற=முறையாக, தேவர்மூவர்=அயன், அரி, அரன்என்னு முத்தேவர்களும், காக்கினும்=காத்தாலும், வழிவழி=அவனுடையசந்ததியை, ஈர்வது=அறுப்பதாகிய, ஓர்வாள்ஆகும்=ஒப்பற்றவாளாயிருக்கும். தாம். ஏ - அசை.

77. பழியாவருவதுஉமொழியாதெ[illegible]ழிவது.

பழியா=நிந்தையோடு, வருவதும்=[illegible]வதும், ஒழிவது=நீங்குவதும், ஒழியாது=நீங்காது.

78. சுழியாவருபுனலலையாதொழிவது.

சுழியா=சுழித்து, வருபுனல்=வருகின்றநீர், அலை=திரையை, யாதொழிவது=ஒழிவதேது.

79. துணையோடல்லதுநெடுவழிபோகேல்.

துணையோடல்லது = துணையோடுகூடியல்லாமல், நெடுவழி=தூரவழியில், போகேல்=செல்லாதே.

80. புணைமீதல்லதுநெடும்புனலேகேல்.

புணைமீதல்லது=தெப்பத்திலேயல்லாமல், நெடும்புனல்=நீண்டநீரிலே, ஏகேல்=போகாதே.

81. எழிலார்முலைவரிவிழியார்தந்திரம்
இயலாதனகொடுமுயல்வாகாதே.

எழிலார்முலை = அழகுபொருந்திய முலையையும், வரிவிழியார்=வரிகள்பொருந்திய கண்ணையுமுடையமாதர்கள், தந்திரம்=சொல்லுமுபாயத்தினால், இயலாதனகொடு = பொருந்தாதவைகளைக்கொண்டு,முயல்வு ஆகாது=முயற்சிசெய்தல் ஆகாது.

82. வழியேயேகுகவழியேமீளுக.

வழியே=நல்லவழியிலே, ஏகுக=போகக்கடவாய், வழியே=வழிதப்பாமல், மீளுக=திரும்பக்கடவாய்.

83. இவைகாணுலகிற்கியலாமாறே.

இவை = இவைதாம், உலகிற்கு = உலகத்தோர்க்கு, இயலாம்=நடப்பதற்குரிய, ஆறு=வழிகள். காண். ஏ - அசை.

84. வாழியநலனேவாழியநலனே.

நலன்=எல்லாநன்மைகளும், வாழிய = வாழக்கடவன, நலன்=எல்லாஇன்பங்களும், வாழிய=வாழக்கடவன.

வெற்றிவேற்கைமுற்றிற்று